

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.3.2025) தலைமை நிலைய அலுவலகச் செயலாளரும், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவருமான துறைமுகம் காஜா மற்றும் கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் ஆகியோர் சந்தித்து இரமலான் வாழ்த்துத் தெரிவித்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.3.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானத்தில் பிரேசில் லெஜண்ட்ஸ் மற்றும் இந்தியா ஆல் ஸ்டார்ஸ் அணிகளுக்கு இடையே நடைபெற்ற கால்பந்து போட்டியை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் கால்பந்தாட்ட சங்க நிர்வாகிகள், விளையாட்டு ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

### மொழிப்போரில் பங்கேற்று தமிழ் மொழிக்குப் போராடிய

# தாளமுத்து - நடராஜனுக்கு சிலை! முதல்வருக்கு நன்றி!

## மாணவரணி மாவட்ட அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

உதகை, ஏப். 1 -

மொழிப்போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று தமிழ் மொழி காத்த நடராஜன், தாளமுத்து ஆகியோருக்குச் சிலைகள் அமைக்கப்படும் என அறிவித்ததோடு மொழிப்போர் ஈகியர் திருநாளை அரசு விழாவாக நடத்திய தமிழ் இனக் காவலர் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உதகை, ஹெவேலோக் சாலையில் அமைந்துள்ள “ஓட்டல் மோனார்க்” இல், கழக துணைப் பொதுச்செயலாளர், ஆ.இராசா, எம்.பி., தலைமையிலும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலை யிலும் தி.மு.க மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டகள் கூட்டம் நடைபெற்றது. மாணவர் அணியை மேம்படுத்துதல் குறித்து ஆலொசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி ஒருங்கிணைப்பில் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் பங்கேற்பில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

1938ஆம் ஆண்டு மதராஸ் மாகாணத்தின் அப்போதைய முதலமைச்சரான இராஜாஜி அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்கள் இனி கட்டாயமாக இந்தி மொழியைக் கற்க வேண்டுமென்று வெளியிட்ட அறிவிப்பினை எதிர்த்து, 27.02.1938 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாய்மொழியை காக்க இந்தித் திணிப்பினை எதிர்க்க வேண்டும் என்று வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில், தந்தை பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதியார், பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாய்மொழி காக்க களம் கண்டனர்.

அப்போது, 14 வயதேஆன பள்ளி மாணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதியில் தன்னுடன் பயிலும் மாணவர்களை அணி திரட்டி, “கயல், வில், புலி” சின்னம் பொறித்த தமிழ்க் கொடியினை கையிலேந்தி,

ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்!

நீ தேடி வந்த கோழை யுள்ள நாடிதல்லவே!”

என்று, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்ப்பரணி பாடி, தமிழ்மொழி காக்கும் போர் வீரராய் முன் வந்தார்.

அன்னைத் தமிழ் காக்க, முதற்கட்ட முதற்கட்ட இந்தி இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்ற நடராசன் 15.01.1939 அன்றும்: தாளமுத்து 11.03.1939 அன்றும் வீர மரணம் அடைந்தனர். இதையடுத்து தமிழக மக்கள் நடத்திய தொடர் போராட்டத்தினால், கட்டாய இந்தி திணிப்பை கைவிடும் முடிவுக்கு வந்தது ராஜாஜி அரசு. நடராசனின் இறுதி ஊர்வலமும், தாளமுத்துவின் இறுதி ஊர்வலமும் பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்றது. தாளமுத்துவை அடக்கம் செய்துவிட்டு மூலக் கொத்தளம் இடுகாட்டில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள் “விடுதலை பெற்ற தமிழ்நாட்டில் பெரியாரை நடுவில் வைத்து இறந்த இரு மணிகளையும் பக்கத்தில் வைத்து உருவச்சிலை எழுப்ப வேண்டும்” எனக் குறிப்பிட்டார்.

அதற்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் மொழிப்போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர் நீத்த மதிப்பிற்குடிய நடராஜன், தாளமுத்து ஆகிய இருவருக்கும் சென்னை, எழும்பூரில் உள்ள தாளமுத்துநடராசன் மாளிகை வளாகத்தில் திருவுருவச் சிலை நிறுவப்படும் என அறிவித்ததோடு மொழிப்போர் ஈகியர் நாளை அரசு விழாவாக எடுத்த கழகத் தலைவர். தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் உழைத்தவர்க ளைப் பெருமைப்படுத்தும் வகையில் அறிவிப்பு வெளியிட்டுள்ள தமிழக முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு மாணவர் அணி நன்றியை உரித்தாக்குகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய

# நிதியை ஒன்றிய அரசு உடனே வழங்க வேண்டும்!

## தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் பி.பழனியப்பன் பேட்டி!

தர்மபுரி, ஏப். 1 -

தர்மபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் காரிமங்கலத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பி.பழனியப்பன் தலைமை தாங்கினர்.கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களை சந்தித்த அவர் தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய நிதியை தராமல் ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்



சித்து வருகிறது. குறிப்பாக 100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய நிதி ரூ.4032 கோடி வழங்காமல் ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருப்பது மிகவும் கண்டனத்துக்குரியது. லட்சக்கணக்கான பெண் தொழிலாளர்களின் வாழ்வாதாரமாக இருக்கும் இந்த தொகையை ஒன்றிய அரசு உடனே வழங்க வேண்டும்.

இதேபோன்று தமிழ்நாட்டில் இந்தியை திணிக்கும் நோக்கில் புதிய கல்விக் கொள்கையை உருவாக்கி தமிழ்நாட்டிற்குத் தர வேண்டிய கல்வி நிதியும் தராமல் ஒன்றிய பிஜேபி அரசு வஞ்சித்து வருகிறது. நாடாளுமன்ற தொகுதி சீரமைப்பு தொடர்பாக கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் கூட்டிய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் நாடாளுமன்ற தொகுதிகள் குறையாமல், எந்த பாதிப்பும் ஏற்படாமல் தொகுதி சீரமைப்பை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் இந்த திட்டத்தை 25 ஆண்டுகளுக்கு தள்ளி வைக்க வேண்டும். இதேபோன்று தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய நிதி பகிர்வில் பாரபட்சம் பார்ப்பதை ஒன்றிய அரசு கைவிட வேண்டும் என்று தெரிவித்தார்.



தஞ்சாவூர் மாவட்டம் ஓரத்தநாடு ஒன்றியம் பஞ்சநதிக் கோட்டையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் ரூபாய் 141 இலட்சம் மதிப்பில் அதிதிறன் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில்துறை அமைச்சர் டாக்டர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் திறந்து வைத்தார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் அ.சண்முகசுந்தரம், மாவட்ட ஆட்சித் தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, டிகே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம். இராமச்சந்திரன், கே.டி. மகேஷ் கிருஷ்ணசாமி, மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதநிலை மண்டல மேலாளர் நெ.செல்வம் மற்றும் பலர் உடன் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.3.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு ஆதி ஆந்திரா டாக்டர் கலைஞர் நற்பணி மன்றத்தின் மாநில தலைவர் முனிரத்தினம் எலமந்தா அவர்கள் சந்தித்து யுகாதி தின வாழ்த்துகளை தெரிவித்தார். உடன், மறைந்த முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினர் பி. எலமந்தா அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.3.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானத்தில் பிரேசில் லெஜண்ட்ஸ் மற்றும் இந்தியா ஆல் ஸ்டார்ஸ் அணிகளுக்கு இடையே நடைபெற்ற கால்பந்து போட்டியை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

### தென் மாநிலங்களில் தொகுதி குறைக்கப்பட மாட்டாது என கூறும் உள்துறை அமைச்சர்

# வட மாநிலங்களிலும் தொகுதி உயராது என்று உறுதிமொழி தரத் தயாரா?

## புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, ஏப். 1 -

புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

தற்போது தென் மாநிலத்தில் மக்கள் தொகை 12.51 சதவீதம் இருக்கிறது. வடமாநிலங்களில் 21.83 சதவீதமாக உள்ளது. 9 சதவீதம் வடமாநிலம் மக்கள் தொகை அதிகமாக உள்ளது. குடும்பக் கட்டுப்பாட்டை முறையாக அமல்படுத்தி மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தென் மாநிலங்கள் தொகுதி மறுசீரமைப்பால் பாதிக்கும். கடந்த ஐந் தாண்டுகளில் துறை முகங்கள் வழியாக கடத்தப்பட்ட போதை 11311 கோடி ரூபாய். குஜராத்தில் மட்டும் 7350 கோடி ரூபாய் போதை பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் 2118 கோடி ரூபாய் மதிப்பிலான போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதனால் போதை பொருள் எங்கு இருக்கிறது என்பதை தமிழ்நாடு மக்கள் உணர வேண்டும். போதை பொருள் அதிகம் உள்ள 10 மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு கிடையாது..

தென் மாநிலங்களில் தொகுதி குறைக்கப்பட மாட்டாது என்று கூறும் உள்துறை அமைச்சர் வட மாநிலங்களிலும் தொகுதி உயராது என்று உறுதி மொழி தர தயாரா?

தமிழ்நாட்டின் நலனுக்காக உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்ததாக



எடப்பாடி பழனிச்சாமி கூறினார். உள்துறை அமைச்சர் அமித்ஷா அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி விரைவில் முடிவாகும் என்று கூறியுள்ளார். இதில் யார் பொய் சொல்கிறார்கள் என்பது விரைவில் தெரியும். தற்போது செங்கோட்டையனும் அமித்ஷா மற்றும் நிதி அமைச்சரை சந்தித்து பேசி உள்ளார். அவரும் தமிழக நலன் காக்க கோரிக்கை விடுத்துள்ளேன் என்று கூறுவார். இதற்கான உண்மையான காரணம் என்ன என்பதை விரைவில் தெரிய வரும் .

100 நாள் வேலை திட்டத்தில் மத்திய அரசு கொடுத்த தொகை எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது அதில் தி.மு.க. முறைகேடு நடத்தியுள்ளது என்று அண்ணாமலை கூறியுள்ளது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் 100 நாள் வேலை திட்டம் என்பது மத்திய அரசு நிதி இதில் முறைகேடு நடந்திருந்தால் மத்திய அரசு மூலமாக அண்ணாமலை விசாரணை ஆணையம் அமைத்து விசாரணை செய்து ஊழல் நடந்திருந்தால் கண்டுபிடிக்கட்டும் அதற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை இருப்பினும் தொழிலாளர்கள் நலன் கருதி 5 மாத ஊதிய நிலுவைத் தொகையை உடனடியாக மத்திய அரசு விடுவிக்க வேண்டும் .

தமிழக முதல்வர் விரைவில் இந்தியா கூட்டணி எம்பிக்களோடு இணைந்து பிரதமரை சந்தித்து தொகுதி மறு சீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக கோரிக்கை மனு அளிக்க உள்ளார்.

டாஸ்மாக்கில் தமிழக அரசு என்ன தவறு செய்துள்ளது.

வெளிப்படை தன்மையோடு டாஸ்மாக் நிர்வாகம் நடைபெற்று வருகிறது

மதுவிலக்கு அமலில் உள்ள குஜராத் மாநிலத்தில் அதிக விலைக்கு மது விற்பனை செய்யப்பட்டு வருகிறது ஆனால் தமிழகத்தில் அதிக விலைக்கு மது விற்பனை என்பது கிடையாது.

தொகுதி மறு சீரமைப்பு 2026ல் முடிகிறது. ஒன்று தொகுதி மறு சீரமைப்பு செய்ய வேண்டும் அப்படி இல்லை என்றால் கடந்த காலத்தில் நீடித்தது போன்று 25 ஆண்டுகள் அல்லது ஏதோ ஒரு ஆண்டுகள் நீடிக்க வேண்டும்.

மத்திய அரசு என்ன செய்யப்போகிறது என்பது குறித்து தான் நாங்கள் தற்போது கேள்வி எழுப்புகிறோம். டாஸ்மார்க் ஊழல் தொடர்பாக அமலாக்கத் துறை சோதனை நடத்தி ஒரு மாதத்திற்கு மேல் ஆகி விட்டது. இன்னமும் அறிக்கை கூட அவர்களால் வழங்க முடியவில்லை. இனி அறிக்கை வழங்கினாலும் அதை பொய்யானதாதான் இருக்கும் .

நீதிமன்றத்தில் இந்த அறிக்கை நிற்காது.

டாஸ்மார்க் விவகா ரத்தில் தமிழக அரசு தெளிவாக உள்ளது எதற்கும் நாங்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை.

தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் குறித்து நான் எந்த கருத்தையும் கூற விரும்பவில்லை.

தமிழகத்தில் காவலர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறுவது தவறான விஷயம். தனிப்பட்ட காரணங்களால் ஏதாவது அசம்பாவிதம் ஏற்படும் போது அதற்கு நாங்கள் எவ்வாறு பொறுப்பேற்க முடியும். அப்படியே நடந்தாலும் உடனடியாக குற்றவாளிகள் கைது செய்யப்படுகின்றனர்.

சமீப காலமாக தமிழகத்தில் என்கவுண்டர்கள் அதிக அளவு நடப்பதாக புகார் வந்துள்ளது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் என்கவுண்டர் நடக்கவில்லை என்றால் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று கூறுவீர்கள் என்கவுண்டர் நடத்தினால் என்கவுண்டராக நடத்திக் கொண்டு உள்ளீர்கள் என்று கூறுவீர்கள் குற்றவாளிகள் தப்பித்தால் நாங்கள் என்ன செய்ய முடியும் என்கவுண்டர் நடத்தி தான் பிடிக்க முடியும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.



உதகை, ஹெவேலோக் சாலையில் அமைந்துள்ள ”ஓட்டல் மோனார்க்இல், நேற்று முன்தினம் (30.03.2025) கழக துணைப் பொதுச்செயலாளர், ஆ.இராசா, எம்.பி., தலைமையிலும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையிலும் தி.மு.க மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்ட மாணவர் அணியை மேம்படுத்துதல் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி ஒருங்கிணைப்பில் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் பங்கேற்பில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.